தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 6, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.''

ஒரே தன்மையில் இயங்குவதால் சிறப்புப் பெறும் கற்புடைய மகளிரைப் போல ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொண்டு நடந்தால் பெருமைப் பண்பு அவனிடத்தில் நிலைக்கும்.

1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வி. கார்த்தீசன் அவர்கள் 3—4—1990 ஆம் நாள் அன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கார்த்தீசன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர்கள் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌன மாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).